**MCOP NO:1556/2025** **DATE: 04.03.2026**

ம.சா : 1

பெயர் : திரு.ஏழுமலை

க/பெ : திரு.சக்கரை

வயது : 49

**முதல் விசாரணை**

நான் மனுவில் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 15 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தானது எனக்கு எப்படி ஏற்பட்டது என்றால் பொத்தேரி காவனூரில் என்னுடைய வேலையை முடித்து விட்டு மேலக்கோட்டை போலீஸ் குடியிருப்பிற்கு திரும்புவதற்காக சிக்னலில் நின்று கொண்டிருந்த போது இருசக்கரவாகனம் என் வாகனத்தின் பக்கவாட்டில் மோதி எனக்கு இந்த விபத்து ஏற்பட்டது. நான் ஓட்டி வந்த வாகனத்தின் பதிவு எண் TN 14 C 3424 ஆகும். மோதியதாக சொல்லப்படும் வாகனத்தின் பதிவு எண் என்னால் சொல்ல முடியுமா என்றால் முடியும். அந்த வாகனத்தின் பதிவு எண் TN 31 CJ 8238 ஆகும். விபத்தினால் எனக்கு இடது பக்க இடுப்பு ஜாயிண்டிலும் இடது பக்க புருவத்தின் அருகிலும் மற்றும் என்னுடைய உடலின் பல்வேறு பாகங்களில் காயம் ஏற்பட்டது. விபத்து ஏற்பட்டவுடன் என்னை கண்டிகை கதிர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு ஒரு வாரம் உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்றேன். விபத்து சமயத்தில் நான் கொத்தனார் வேலை செய்து வந்தேன். ஒரு நாளைக்கு ரூ.1500/- கூலியாக பெற்று வந்தேன். மாதத்தில் 30 நாட்களும் நான் பணிக்கு செல்வேன். எனக்கு வாரத்தின் இறுதி நாள்களில் சம்பளம் கொடுப்பார்கள். ஞாயிற்றுக்கிழமை வேலைக்கு போனால் மட்டும் அன்றே கொடுத்துவிடுவார்கள். விபத்திற்கு பின்னிட்டு நான் வேலைக்கு செல்லவில்லை. விபத்தினால் எனக்கு ரூ.2,15,458/- மருத்துவ செலவு ஆனது. மருத்துவ காப்பீட்டு மூலமாக மருத்துவ செலவு தொகையை ஈடு செய்யவில்லை. என்னுடைய கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் என்னுடைய இருசக்கர வாகனத்தை தாறுமாறாக ஓட்டி நிறுத்தியதால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்பதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணைஇல்லை</u>**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு 04.03.2026 ல் அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.